திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கோபி நகராட்சி மருத்துவ மனை 3 தாலுக்காக்களின் மத்தியிலே இருக்கக்கூடிய மருத்துவ மனை அதை 100 படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவ மனையாக மாற்றுவதற்கான திட்டம் இருப்பதாகச் சொல்கிறார்கள். மக்களின் தேவையைக் கருதி, 150 படுக்கை வசதிகளாகவாவது மாற்றுவதற்கு அரசு மீண்டும் பரிசீலனை செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பொதுவாக தாலுக்கா ஹெட் குவார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரிகளுக்கென்று, அவைகளை 100 படுக்கை வசதிகள் கொண்டதாக மாற்றுவது பற்றி பரிந்துரை செய்யப்பெற்றிருக்கிற திட்டம். தாலுக்கா ஹெட்குவார்ட்டர்ஸ் மருத்துவ மனைகளில் 100 படுக்கைகளும், மாவட்ட மருத்துவ மனைகளில் 300 படுக்கை வசதிகளும் ஏற்படுத்த வேண்டும் என்பது பொதுவாகக் கொண்டு வரப்பட்டிருக்கிற திட்டம். இது அடுத்தஆண்டு அமுலுக்கு வருவது பற்றிதான் அரசு ஆராய்ந்துக் கொண்டிருக்கிறது.

திருநெல்வேலி நகரப் பேருந்துப் பணி.

*வினா எண். 138 திரு. இ. முத்துராமலிங்கம்; மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருநெல்வேலி மாவட்டம் திருநெல்வேலி நகராட்சியில் இயங்கும் தனியார் நகரப் பேருந்துகளை அரசுடமை ஆக்கும் திட்டம் எதுவும் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) மற்றும் (ஆ) 1973 ஆம் ஆண்டு தமிழ்நாடு பயணிப் பேருந்துகள் ஒப்பந்தப் பேருந்துகள் (கையகப்படுத்துதல்) சட்டத்தின்மீது டெல்லி உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பைப் பொறுத்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. இ. முத்துராமலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலியில் தனியார் பேருந்துகள் எத்தனை வழித் தடங்களில் ஓடுகின்றன? அது போன்று அரசு பேருந்துகள் எத்தனை வழித்தடங்களில் ஓடுகின்றன என்பது பற்றிய தகவல் இருந்தால் அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அர்களே, எந்தெந்தப் பேருந்துகள் எவ்வளவு ஓடுகின்றன என்கிற குறிப்பு என்னிடத்தில் இல்லை.

1981 ஜனவரி 31]

தனியார் பேருந்துகள் அரசுடைமை ஆக்கப்படுமா என்று தான் மூலக் கேள்வியில் கேட்டிருக்கிறார்கள். அது சம்பந்தமாக உச்சநீதிமன்றத்தில் வழக்கு நடத்துக் கொண்டிருப்பதால், அதன் முடிவுக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்று பதிலளித்திருக்கிறேன்.

திரு. மி. வின்செண்ட்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் பேருந்துகளை அரசுடைமை ஆக்கும்போது அதிலுள்ள நடத்துனர், ஓட்டுனர் போன்ற பணியாளர்களுக்கு வேலை கிடைக்கும் வகையில் அரசு நடவடிக்கை எடுக்க முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்விக்குச் சம்பந்தமே இல்லை, தனிக் கேள்வி போடுங்கள்.

திரு. மு. ஜான்வின்செண்ட்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் பேருந்துகளை தேசிய உடைமையாக்குவது குறித்து வழக்கு ஒன்று உச்ச நீதிமன்றத்தில் நடப்பதாகக் கூறினார்கள். நெல்லை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அரசாங்க பஸ்கள் விடுவதற்கும் போதிய வண்டிகள் கைவசம் இல்லை என்று சொல்கிறார்கள். அதனால் மக்களுக்கு போக்குவரத்து வசதி ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் தனியார்களுக்கும் சில வழித்தடங்களில் பெர்மிட் கொடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் பேருந்துகளை தேசிய உடைமையாக்குவதற்கு உச்ச நீதிமன்றத்திலே வழக்கு நடக்கும் இந்தச் சூழ்நிலையைப் பார்க்கிறபோது, வெளிப்படையாகச் சொல்ல வேண்டுமானால், தேசீய மயமாக்க வேண்டும் என்பது அரசாங்கத்தின் முழுமையான கொள்கையாக இருந்தாலும் கூட எல்லா வழித் தடங்களிலும் வண்டியை விடுவதற்கு வேண்டிய சேஸிஸ்கள் கிடைக்காத நிலைமையைப் பார்க்கிற போது, அரசுடைமை ஆக்குவதை படிப்படியாக நிறைவேற்றிக் கொண்டு மக்களின் தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்கிற முறையில் தனியார்களுக்கும் பெர்மிட் கொடுக்கலாம் என்று அரசாங்கம் ஆலோசிக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலியில் இருக்கிற சில தனியார் பேருந்துகளை அரசுடைமை ஆக்குவது சம்பந்தமாக வழக்கு ஒன்று உச்ச நீதி மன்றத்தில் இருப்பதாகச் சொன்னார்கள். இருக்கட்டும். அதற்கு முன்பாக, அங்கே அரசாங்கத்தினுடைய கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம் இருக்கிறதே அதின்

அதிகமான பேருந்துகளை ஓட்ட அரசு ஏற்பாடு செய்யுமா? ஏனென்றால், மொத்தமாக 4 மணிக்கு ஒரு முறை எல்லா பஸ்களும் ஒன்றன் பின் ஒன்றாகப் போய்விடுகின்றன. மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகையினால் அதைக் குறைக்கும் வகையில் பரவலாக, சரியான இடைவெளியில் பேருந்துகள் வரும் வகையில், கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தில் அதிகமான பஸ்களை விட அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்?

[முற்பகல் 10.10]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: என்னுடைய கவனத்திற்கு இப்போது அதைத் தெளிவாகக் கொண்டு வந்திருக்கிறார்கள். நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று சொல்வதோடு நமக்குக் கிடைப்பது மாதம் ஒன்றுக்கு 125 பேருந்துகள்தான். அந்தப் பேருந்துகளை நாம் தமிழகம் பூராவும் இயக்கவேண்டிய நிலையில் புதிதாகக் கொடுக்க வேண்டிய சூழ்நிலைக்கு ஆளாக்கப் படும் நிலையில் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்திற்கு எவ்வளவு ஒதுக்கீடு கிடைக்கிறதோ அதைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரேநேரத்தில் நான்கு வண்டிகள் ஓடுகின்றன என்று சொல்கிறார்கள்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: கட்டபொம்மன் போக்குவரத்துக்கழகம் அவர்கள் கையில் பேருந்துகளை வைத்துக் கொண்டு இயக்காமல் இல்லை. கிடைத்தவுடன் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திண்டுக்கல்—சென்னை விரைவுப் பேருந்துப் பணி

*வினா எண். 139 திருவேடசெந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

திண்டுக்கல்—சென்னை வழித்தடத்தில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் ஓர் விரைவுப் பேருந்து விடும் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: சென்னையிலிருந்து திண்டுக்கல் வரை விரைவுப் பேருந்து விட மைலேஜ் இல்லை. திண்டுக்கல் வழியாகச் சென்னையிலிருந்து பொள்ளாச்சி வரை ஒரு பேருந்து விட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்தப் பேருந்தில் திண்டுக்கல் பிரயாணிகளுக்கு என இருக்கைகள் ஒதுக்கப்பட உள்ளன.

திரு. வேடசெந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: அப்படி ஒதுக்கப்படுகிற சீட்களில் குறைந்தது பாதியாவது ஒதுக்கப் படுமா? சென்னை—பெரியகுளம். சென்னை—கம்பம் வண்டி களில் திண்டுக்கல்லில் ஏறுகிற பயணிகளுக்கு தேவைப்பட்ட அளவில் சீட்கள் ஒதுக்கப்படுமா?